## ‘நீட்’ தேர்வு வந்ததற்கு தி.மு.க.வும் காங்கிரசும் தான் காரணம்

# ‘நீட்’ வரலாறு தெரியாமல் பேசுகிறார் ஸ்டாலின்: ஓ. பன்னீர்செல்வம் தாக்கு

சென்னை, பிப்.12–

நீட் தேர்வு மற்றும் நுழைவுத்தேர்வு குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தெரிவித்து வருகிறார் என்று ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக பேசிய தி.மு.க. தலைவர், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் எந்தத் தேர்வு மையத்தில் நீட் நடந்ததென்று சொல்ல முடியுமா என்று அண்ணா தி.மு.க.வைப் பார்த்துக் கேட்பது தி.மு.க. தலைவரின் அறியாமையையும், நீட் தேர்வின் வரலாறு தெரியாமல் அவர் பேசுகிறார் என்பதும் கண்கூடாகத் தெரிகிறது.

தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், தி.மு.க.வைச் சேர்ந்த எஸ். காந்திசெல்வன் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சராக இருந்தபோது, 27.12.2010 அன்று மருத்துவம் பயிலுவதற்கு நீட் தேர்வு கட்டாயம் என்ற அறிவிக்கை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2013–2014–ம் கல்வி ஆண்டிலிருந்து நீட் தேர்வு மூலம் மருத்துவச் சேர்க்கை நடத்தப்படும் என்று 26.4.2012 அறிவிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது தி.மு.க. மத்திய அரசை தாங்கிப் பிடித்த காலத்தில்தான்.

### மூல காரணம் யார்?

அப்படி என்றால் நீட் தேர்விற்கு மூலக் காரணம் யார்? தி.மு.க.வும், அப்போதைய மத்திய காங்கிரஸ் அரசும் தான் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. கைப்புண்ணுக்கு எதற்கு கண்ணாடி? எனவே, நீட் தேர்வு வந்ததற்கு தி.மு.க. தான் முழுப் பொறுப்பு. இதற்கான ஆதாரம் வலுவாக இருக்கிறது. எனவே, இதை மூடி மறைக்க முடியாது. அதே சமயத்தில் அண்ணா தி.மு.க. ஒருபோதும் நுழைவுத் தேர்வையோ அல்லது நீட் தேர்வையோ ஆதரித்தது இல்லை.

### சிறுபிள்ளைத்தனம்

2010–ம் ஆண்டு இறுதியில் இதற்கான அறிவிக்கையை வெளியிட்ட தி.மு.க. 2011–ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாட்டில் ஆட்சியை பறிகொடுத்தது. அதற்குப் பிறகு 2021–ல் தான் ஆட்சிக்கு வந்திருக்கிறது. பத்தாண்டு காலமாக தி.மு.க. ஆட்சியிலேயே இல்லாத போது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்தத் தேர்வு மையத்தில் நீட் தேர்வு நடந்தது என்று கேட்பது சிறுபிள்ளைத்தனமானது.

நீட் தேர்வு நடந்ததற்குக் காரணம் தி.மு.க.வும், காங்கிரஸ் கட்சியும் தான். பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல, அன்று ‘நீட்’டிற்கு கையெழுத்து போட்டுவிட்டு, இன்று அதற்கு எதிராக நீலிக் கண்ணீர் வடிக்கிறது தி.மு.க. இன்று இதுகுறித்து பேசும் மு.க. ஸ்டாலின், 2010–ம் ஆண்டு இதுகுறித்து ஏதாவது பேசினாரா அல்லது இதுகுறித்து ஏதாவது அவருக்கு தெரியுமா?

நீட் தேர்வை அறிமுகப்படுத்திய மத்திய காங்கிரஸ் அரசிலிருந்து தி.மு.க. ஏன் உடனடியாக வெளி வரவில்லை? 2010–ம் ஆண்டே தி.மு.க. எதிர்ப்பு தெரிவித்தது, கடிதம் எழுதியது என்று கூறும் தி.மு.க. தலைவர், ஏன் மத்திய ஆட்சிக்கு கொடுத்து வந்த ஆதரவை 2013 வரை திரும்பப் பெறவில்லை? அரசே ஒரு விதியை போட்டுவிட்டு அதை அரசே எதிர்ப்பது என்பது விசித்திரமான ஒன்று என்பது தி.மு.க. தலைவருக்கு புரியவில்லையா? இதுதான் தி.மு.க. செய்த மிகப் பெரிய துரோகம். இதற்கெல்லாம் பதில் சொல்ல தி.மு.க. தலைவர் தயாரா?

இது குறித்து மேலும் பேசிய தி.மு.க. தலைவர், நீட் தேர்வு செல்லாது என்று தி.மு.க. அரசும் தொடுத்துள்ள வழக்கில் உச்ச நீதிமன்றம் 18.7.2013 அன்று தீர்ப்பளித்து இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறார். 18.7.2013 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த வழக்கு எண். ஜி.சி. (சி) 98 / 2012. இந்த வழக்கினை வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மற்றும் இதர மருத்துவக் கல்லூரிகள் தொடுத்தன.

இந்த தீர்ப்பின் பக்கம் 178–ல் மருத்துவக் கல்லூரிகளை வைத்திருப்பவர்கள்தான் மனுதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 203 பக்கங்கள் கொண்ட அந்தத் தீர்ப்பில் தி.மு.க. என்ன வாதத்தை வைத்தது என்பது குறித்து ஒரு வார்த்தை கூட இல்லை. இன்னும் சொல்லப் போனால் தி.மு.க. என்ற வார்த்தையே அந்தத் தீர்ப்பில் இல்லை.

### தி.மு.க. வழக்கு தொடர்ந்ததா?

அந்தத் தீர்ப்பில் தி.மு.க. அங்கம் வகித்த மத்திய அரசின் சார்பில் வாதாடிய அரசு வழக்கறிஞர் தேசிய நலன் கருதி நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டது என்று கூறி இருப்பது தீர்ப்பின் பக்கம் 133 ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இன்னும் பல இடங்களில் நீட் தேர்விற்கு ஆதரவாக மத்திய அரசு கருத்து தெரிவித்து இருக்கிறது. இதையெல்லாம் தி.மு.க. எதிர்த்ததாகத் தெரியவில்லை.

2011–ம் ஆண்டு மே மாதத்திலிருந்து 2021–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தி.மு.க. ஆட்சியிலேயே இல்லாதபோது, தி.மு.க. அரசும் என்று தி.மு.க. தலைவர் குறிப்பிட்டு இருப்பது அவரது அறியாமையை காட்டுகிறது. முதலில் தி.மு.க. வழக்கு தொடுத்தது என்று கூறிவிட்டு, இப்போது தி.மு.க. அரசும் என்று கூறி இருப்பதைப் பார்க்கும்போது, தி.மு.க. நீட் தேர்வு குறித்து வழக்கு தொடுத்ததா என்ற சந்தேகம் மக்கள் மனதில் தற்போது வலுப் பெற்றுள்ளது.

எனவே, நீட் தொடர்பாக தி.மு.க. என்ன வழக்கை தொடுத்தது? எங்கே தொடுத்தது? வழக்கு எண் என்ன? தி.மு.க.வின் சார்பில் என்ன வாதம் வைக்கப்பட்டது? என்பதையெல்லாம் தி.மு.க. தலைவர் நாட்டு மக்களுக்கு ஆதாரத்துடன் தெரியப்படுத்த வேண்டும் என்று அண்ணா தி.மு.க.வின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்ணா தி.மு.க. நுழைவுத் தேர்வை சட்டப்பூர்வமாக ரத்து செய்தது என்று சட்டமன்றத்தில் நாங்கள் உண்மைக்கு மாறான தகவலை கூறுவதாக தி.மு.க. தலைவர் கூறி இருக்கிறார். உண்மைக்கு மாறான தகவல் அல்ல, உண்மையான தகவல் என்பதை தி.மு.க. தலைவருக்கு ஆதாரத்துடன் முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நுழைவுத் தேர்விற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், 2006–ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைபடுத்துவதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 2/2006) 21.1.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு 27.1.2006 அன்று நிறைவேற்றப்பட்டது.

### தி.மு.க. பொய் பிரச்சாரம்

இதனைத் தொடர்ந்து, இதற்கான சட்டம் பிப்ரவரி மாதம் 2.2.2006 அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனைச் செய்து காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா. இதைத்தான் நாங்கள் குறிப்பிட்டுச் சொன்னோமே தவிர, இதில் பொய்யான தகவல் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பெருமை அம்மாவுக்கும், அண்ணா தி.மு.க.வுக்கும் வந்துவிடக் கூடாது, தி.மு.க. ஆட்சியில் தான் வரவேண்டும் என்பதற்காக அரசியல் காழ்ப்புணர்ச்சியில் சில நடவடிக்கைகளை அப்போது தி.மு.க. மேற்கொண்டதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியின் கடைசி காலத்தில் ஏழை, எளிய, கிராமப்புற மாணவ மாணவியருக்கு, பழங்குடியின, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு துரோகம் செய்துவிட்டு, இப்போது பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும் தி.மு.க. தலைவருக்கு அண்ணா தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, வரலாறு தெரியாமல் மனம் போன போக்கில் பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

## சென்னையில் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக 25 புகார்கள்

சென்னை, பிப்.12–

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை முன்னிட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாத மற்றும் விதிமீறல் தொடர்பாக 25 புகார்கள் பதியப்பட்டுள்ளன என்று தேர்தல் அலுவலர் மற்றும் சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கமிஷனர் ககன்தீப் சிங் பேடி கூறியதாவது:–

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிக்கான தேர்தல் வரும் 19ந்தேதி நடைபெற உள்ளது. இதையடுத்து பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 21 மாநகராட்சிகள், தேர்தல் நடைபெறும் நகராட்சிகள், பேரூராட்சிகளில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன. சென்னையில் தேர்தல் விதிமீறல்களை கண்காணிக்க 45 பறக்கும் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அந்தவகையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் இதுவரை தேர்தல் நடத்தை விதியை மீறியதாக 25 புகார்கள் அளிக்கப்பட்டுள்ளது.

## 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை காண்பித்து ஓட்டுப் போடலாம்: மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை, பிப்.12–

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்குச்சாவடி சீட்டு (பூத் சிலிப்) உள்ளவர்களும் அல்லது வாக்குச்சாவடி சீப் இல்லாதவர்களும் வாக்காளர் அடையாள அட்டை, அல்லது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ள கீழ்க்காணும் 11 அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம்.

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகள் (தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர் முதல்நிலை பேரூராட்சி தவிர) என 648 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் 19–ந் தேதி அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

எனவே, 38 மாவட்டங்களில் உள்ள வாக்காளர்கள், தங்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்குச்சாவடி சீட்டு உள்ளவர்களும்அல்லதுவாக்குச்சாவடி சீட்டு இல்லாதவர்களும் வாக்காளர் அடையாள அட்டை, அல்லது தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ள கீழ்க்காணும் 11 அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம்.

1) ஆதார் அட்டை

2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை

3) புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்

4) தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீடு ஸ்மார்ட் கார்டு

5) ஓட்டுநர் உரிமம்

6) நிரந்தர கணக்கு எண் அட்டை (பான் கார்டு)

7) தேசிய மக்கள் பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் கார்டு

8) இந்திய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)

9) புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10) மத்திய, மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களால் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

11) பாராளுமன்ற, சட்டமன்ற, சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை

எனவே, நடைபெறவிருக்கும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களில் வாக்குப்பதிவின்போது ஆள் மாறாட்டங்களைத் தவிர்க்க மேற்காணும் அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காண்பித்து வாக்களிக்கலாம்.

இத்தகவலை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.


**CG-VAK**
**SOFTWARE AND EXPORTS LIMITED.**
AN ISO 9001:2015 CERTIFIED COMPANY
Regd. Off. 171 Mettupalayam Road, Coimbatore – 641 043
Website: www.cgvak.com, e-mail:investorservices@cgvak.com
CIN:L30009TZ1994PLC005568

**Statement of Unaudited Standalone Financial Results for the Quarter and Nine months ended 31.12.2021** (Rs. In Lakhs)

| Particulars | QUARTER ENDED | | | NINE MONTHS ENDED | | YEAR ENDED |
|---|---|---|---|---|---|---|
| | 31.12.2021 | 30.09.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Unaudited |
| Total income from operations | 991.15 | 945.07 | 743.56 | 2,718.35 | 2,257.74 | 3,039.18 |
| Net Profit / (Loss) for the period before tax (before Exceptional and Extraordinary items) | 286.33 | 298.37 | 214.69 | 790.95 | 684.48 | 903.94 |
| Net Profit / (Loss) for the period before tax (After Exceptional and Extraordinary items) | 286.33 | 298.37 | 214.69 | 790.95 | 684.48 | 903.94 |
| Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary items) | 214.02 | 224.43 | 172.50 | 592.79 | 511.88 | 686.37 |
| Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) | 214.36 | 226.53 | 172.06 | 601.67 | 510.65 | 689.44 |
| Equity Share Capital | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 |
| "Earnings Per Share (of 10/- each)" | | | | | | |
| Basic : | 4.24 | 4.44 | 3.42 | 11.74 | 10.14 | 13.59 |
| Diluted: | 4.24 | 4.44 | 3.42 | 11.74 | 10.14 | 13.59 |

1) The above is an extract of the detailed format of Quarter and Nine months ended Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligtions and Disclosures Requirements) Regulations, 2015. The full format of the Quarter and Nine months ended Financial Results are available on the website of the Company (www.cgvak.com) and Stock Exchange website (www.bseindia.com).
2) Figures for the previous year have been regrouped/rearranged where ever necesssary to correspond with current period figures.

**Statement of Unaudited Consolidated Financial Results for the Quarter and Nine months ended 31.12.2021** (Rs. In Lakhs)

| Particulars | QUARTER ENDED | | | NINE MONTHS ENDED | | YEAR ENDED |
|---|---|---|---|---|---|---|
| | 31.12.2021 | 30.09.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Audited |
| Total income from operations | 1,404.11 | 1,288.10 | 1,110.86 | 3,764.76 | 3,350.31 | 4,490.79 |
| Net Profit / (Loss) for the period before tax (before Exceptional and Extraordinary items) | 295.16 | 302.00 | 218.25 | 806.18 | 697.69 | 918.40 |
| Net Profit / (Loss) for the period before tax (After Exceptional and Extraordinary items) | 295.16 | 302.00 | 218.25 | 806.18 | 697.69 | 918.40 |
| Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary items) | 220.52 | 226.84 | 174.77 | 603.44 | 520.67 | 696.17 |
| Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) | 220.86 | 228.94 | 174.33 | 612.32 | 519.44 | 699.24 |
| Equity Share Capital | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 |
| "Earnings Per Share (of 10/- each)" | | | | | | |
| Basic : | 4.37 | 4.49 | 3.46 | 11.95 | 10.31 | 13.78 |
| Diluted: | 4.37 | 4.49 | 3.46 | 11.95 | 10.31 | 13.78 |

1) The above is an extract of the detailed format of Quarter and Nine months ended Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligtions and Disclosures Requirements) Regulations, 2015. The full format of the Quarter and Nine months ended Financial Results are available on the website of the Company (www.cgvak.com) and Stock Exchange website (www.bseindia.com).
2) Figures for the previous year have been regrouped/rearranged where ever necesssary to correspond with current period figures.

For and on behalf of the Board
**For CGVAK Software And Exports Limited**
-Sd-
**G Suresh**
**Managing Director & CEO**
DIN 00600906

Place : Coimbatore
Date : 11.02.2022


## சென்னை மாநகராட்சி தேர்தல்: 11,971 பணியாளர்களுக்கு தபால் வாக்குகள்

சென்னை, பிப்.12

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளுக்கான தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ளவாக்குச்சாவடி அலுவலர்களில் 11 ஆயிரத்து 971 நபர்களுக்கு தபால் வாக்குகள் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளுக்கு நடைபெறும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை முன்னிட்டு, மத்திய, மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த 27 ஆயிரத்து 812 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் 2 கட்டங்களாக 21 இடங்களில் ஏற்கனவே நடைபெற்றது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட அலுவலர்களில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் வாக்களிக்கும் 16 ஆயிரத்து 657 நபர்களுக்கு தபால் வாக்குகளுக்கான படிவம் 15 வழங்கப்பட்டது. எஞ்சியுள்ள நபர்கள் ஊரக பகுதிகளில் வசிக்கின்றனர்.

படிவம்–15 வழங்கப்பட்ட 16 ஆயிரத்து 657 நபர்களில் 13 ஆயிரத்து 170 நபர்கள் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளுக்கான வாக்காளர் பட்டியலிலும், 3 ஆயிரத்து 487 நபர்கள் பிற மாவட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வாக்காளர் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளனர்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளுக்கான வாக்காளர் பட்டியலில் இடம்பெற்று, தபால் வாக்கு செலுத்த படிவம் 15 வழங்கியுள்ள 13 ஆயிரத்து 170 நபர்களில் 11 ஆயிரத்து 971 நபர்களுக்கு தபால் வாக்குகள் அவர்களின் முகவரிக்கு அஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு தபால் வாக்குகள் அனுப்பும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இத்தகவலை சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**
**Central Bank of India**

மந்தவெளி கிளை
44/1, வெங்கடகிருஷ்ணா ரோடு,
மந்தவெளி, சென்னை-600028.
Ph: 044-2346 4322/4323

**தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு**

**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மந்தவெளி கிளையில்** தங்க நகையை அடமானம் வைத்து அதன் பேரில் நகைக் கடன் வசதி பெற்ற பின்வரும் கடன்தாரருக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டு கடன் நிலுவைத் தொகைகளை திரும்ப செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால் அந்த கடன்தாரர் தங்களது நகைக்கடன் பேரில் உள்ள கடன்பாக்கியை செலுத்த தவறிவிட்டார். **எனவே வங்கியிடம் அடமானத்திலுள்ள அவரது தங்க நகையை 16.02.2022 தேதியன்று ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டிய அவசியமும் மற்றும் கட்டாயமும் வங்கிக்கு ஏற்பட்டுள்ளது.** ஏலத்தில் நகையை விற்பனை செய்வதன் மூலம் உபரித்தொகை எதுவும் கிடைக்குமானால் அந்த தொகை வங்கிக்கு செலுத்த வேண்டிய இதர கடன் தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டு மீதி தொகை ஏதேனும் இருப்பின் அது கடன்தாரருக்கு திருப்பி தரப்படும். அதே போல் ஏலத்தில் குறைவான தொகை கிடைக்குமானால் வங்கிக்கு கிடைக்க வேண்டிய மீதி கடன்பாக்கித் தொகையை உரிய சட்ட நடைமுறைகள் மூலம் அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை வங்கி எடுக்கும். பின்வரும் நகை கணக்குக்குரிய எந்தவொரு நகையையும் முன் அறிவிப்பும் இன்றி ஏலத்திலிருந்து அகற்றிவிட சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவுக்கு உரிமை உண்டு. மேலும் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவுக்கு எந்த முன் அறிவிப்பும் இன்றி ஏலத்தேதி / நேரத்தை மாற்ற அதிகாரம் உண்டு.

| வ. எண். | கணக்கு எண். | கடன்தாரர் பெயர் | கடன் நிலுவைத் தொகை | எடை கிராமில் (Gross) | காப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | 4055831931 | ராமச்சந்திரன் V | ரூ.2,79,093/- | 70.9 | ரூ.70,000/- |
| 2. | 4055831294 | ராமச்சந்திரன் V | ரூ.1,48,697/- | 36.2 | ரூ.37,000/- |
| 3. | 4055831307 | ராமச்சந்திரன் V | ரூ.1,27,537/- | 31.2 | ரூ.32,000/- |
| 4. | 4056355314 | சிவகார்த்திகேயன் S | ரூ.2,63,971/- | 77.6 | ரூ.66,000/- |
| 5. | 4055001658 | சிவகார்த்திகேயன் S | ரூ.2,94,925/- | 78.8 | ரூ.74,000/- |
| 6. | 4054160632 | இன்பராஜ் பிரான்சிஸ் | ரூ.67,263/- | 21.9 | ரூ.17,000/- |

**ஏலமானது மேற்கண்ட முகவரியில் உள்ள சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, 44/1, வெங்கடகிருஷ்ணா ரோடு, மந்தவெளி, சென்னை-600028 எங்களது மந்தவெளி கிளையில் 16.02.2022 தேதியன்று மாலை 03.00 மணியளவில் நடத்தப்படும்.** வாடிக்கையாளர்கள் இறந்து போய் இருப்பாரானால் ஏலம் சம்பந்தப்பட்ட விதிமுறை நிபந்தனைகள் யாவும் அந்த வாடிக்கையாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் தங்களது புகைப்படம், புகைப்படத்துடன் கூடிய PAN அட்டை, செல்லத்தக்க புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை, முகவரி சான்றிதழ் ஆகியவற்றுடன் மேற்குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவிற்கு வருகைத் தரலாம். ஏலம் குறித்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிய கிளை மேலாளரை தொடர்பு கொள்ளலாம். ஏல நடைமுறைகளில் பங்கேற்பதற்காக மேற்குறிப்பிட்ட கடன் கணக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகை காப்புத்தொகையாக (வெற்றிப்பெறாத ஏலதாரர்களுக்கு திருப்பித்தரப்படும்) **“சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா”, மந்தவெளி கிளை என்ற பெயரில் சென்னையில் பெறத்தக்க வகையில் அமைந்த கேட்பு வரைவோலை / வங்கி காசோலை வடிவில் அல்லது 15.02.2022 தேதியன்று மாலை 04.00 மணிக்குள் செலுத்த வேண்டும்.** ஏலத்தில் வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர் முழு ஏலத்தொகையும் உடனடியாக கட்டாமல் போனாலும் அல்லது நகைகளை ஏற்காது போனாலும் அவரது காப்புத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

**தேதி : 11.02.2022**
**இடம் : சென்னை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா**



**நாகா லிமிடெட்**
பதிவு அலுவலகம்: எண்.1, அண்ணா பிள்ளை தெரு, சென்னை – 600 001.
CIN: U24246TN1991PLC020409 | தொலைபேசி எண்.044 2536 3535
Website : www.nagamills.com Email: cs@nagamills.com

**இடைக்கால டிவிடெண்டிற்கான பதிவுத் தேதி அறிவிப்பு**

நிதி ஆண்டு 2021-22க்கு முழுவதும் செலுத்தப்பட்ட ஒவ்வொன்றும் ரூ.10/- முக மதிப்புள்ள சமபங்குகளுக்கு இடைக்கால ஈவுத்தொகையாக ஒரு சம பங்கிற்கு ரூ.1 அதாவது 10%ஐ 11 பிப்ரவரி, 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கம்பெனியின் இயக்குனர்கள் குழு அறிவித்துள்ளது என்று கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு 91 மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகளின் கீழ் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இடைக்கால ஈவுத்தொகையைப் பெற தகுதியுள்ள பங்குதாரர்களைத் தீர்மானிக்கும் பதிவுத் தேதியாக சனிக்கிழமை, 19 பிப்ரவரி, 2022ஐ கம்பெனி நிர்ணயித்துள்ளது.

குழு உத்தரவுப்படி
நாகா லிமிடெட்டிற்காக
**V. மாரிக்கண்ணன்**
கம்பெனி செயலாளர்

இடம் : திண்டுக்கல்
தேதி : 12.02.2022



**S&S POWER**

**எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெட்**
**(CIN:L31200TN1975PLC006966),**
பதிவு அலுவலகம் : மனை எண். 14, சிஎம்டிஏ இன்டஸ்டிரியல் ஏரியா பகுதி-II, சித்தமனூர் கிராமம், மறைமலைநகர் - 603 209, காஞ்சிபுரம் மாவட்டம், இணையதளம் : www.sspower.com

**31.12.2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு** ரூபாய் லட்சங்களில்

| வ. எண் | விவரங்கள் | தனிப்பட்டது | | | | | | தொகுக்கப்பட்டது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
| | | 31.12.2021 | 30.09.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 | 31.12.2021 | 30.09.2021 | 31.12.2020 | 31.12.2021 | 31.12.2020 | 31.03.2021 |
| | | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆனது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆகாதது) | (த.ஆனது) |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | 99.05 | 84.36 | 91.51 | 279.16 | 272.32 | 404.30 | 2701.92 | 3043.22 | 3234.68 | 8123.20 | 8613.45 | 13327.47 |
| 2 | நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | (31.55) | (31.73) | (8.10) | (87.16) | (64.07) | (110.09) | (323.27) | (382.50) | 1.16 | (1096.07) | (144.31) | (171.33) |
| 3 | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | (31.55) | (31.73) | (8.10) | (87.16) | (64.07) | (110.09) | (323.27) | (382.50) | 1.16 | (1096.07) | (144.31) | (171.33) |
| 4 | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | (30.35) | (31.52) | (4.46) | (84.22) | (58.62) | (109.76) | (308.05) | (384.09) | (1.69) | (1081.70) | (126.69) | (153.66) |
| 5 | நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம் / நஷ்டம் (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வாருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது) | (26.01) | (27.17) | (4.40) | (71.19) | (58.45) | (92.38) | (297.98) | (406.72) | 32.23 | (1069.55) | (65.30) | (221.59) |
| 6 | சமபங்கு மூலதனம் | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 |
| 7 | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஸ்சீட்படி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வ் நீங்கலானது).. | - | - | - | - | - | 589.18 | - | - | - | - | - | (724.64) |
| 8 | பங்கு ஒன்றின் வருவாய் (தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது) a) அடிப்படை | (0.49) | (0.51) | (0.07) | (1.36) | (0.95) | (1.77) | (4.97) | (6.20) | (0.03) | (17.45) | (2.04) | (2.48) |
| | b) திட்பம் | (0.49) | (0.51) | (0.07) | (1.36) | (0.95) | (1.77) | (4.97) | (6.20) | (0.03) | (17.45) | (2.04) | (2.48) |

**குறிப்புகள் :** 1. COVID 19 சர்வதேச நோய் பரவுதல் காலக்கட்டத்தில் பணி நிறுத்தங்கள் மற்றும் பூட்டுதல்கள் முதல் காலாண்டில் உள்ளன. தளபாடத்தில் கட்டுப்பாடுகளுடன் பாதுகாப்பை நிர்வகிக்கவும் வியாபாரம் செயல்படவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கோவிட் தாக்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டின் செயல்பாடுகள் பாதிப்புகள் இல்லாமல் மேம்பட தொடங்கியுள்ளன.
2. இந்த காலாண்டில் பொருட்களின் விலை உயர்வில் விளிம்பின் குறிப்பிடத்தக்க பகுதியை உயர்ந்துள்ளது.
3. மேற்குறிப்பிடப்பட்ட தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் 10-02-2022 அன்று தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு பரிந்துறைக்கப்பட்டு 11-02-2022 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.
4. 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 133-வது பிரிவின் கீழும், 2015-ம் வருத்திய கம்பெனிகள் (இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகள்) திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழும், குறிப்பிடப்பட்டுள்ள இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகளை ("Ind AS") பின்பற்றி கம்பெனியின் தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட தணிக்கைசெய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
5. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 133-வது விதிமுறை, விதி 3-ன் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்களில் காணலாம்.
6. கம்பெனியானது பவர் பரிமாற்றம் மற்றும் வினியோகத்திற்கான மின் உபகரணம் உற்பத்தி என்கிற ஒரு தொகுப்பை மட்டும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. Ind AS 108 ல் வழங்கப்பட்டுள்ளபடி இந்தியா மற்றும் UK வில் குழுமத்தின் செயல்பாடுகள் புவியியல் பிரிவுகள் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுளது.
7. நடப்பு காலாண்டு மற்றும் ஆண்டுக்காண முடிவுகளை ஒப்பிட்டு பார்ப்பதற்காக தேவையான இடங்களில் முந்தைய காலாண்டுகள் மற்றும் ஆண்டுகளுக்கான முடிவுகள் மறுபிரிவு மற்றும் மறுசீரமைப்பு செய்து காட்டப்பட்டுள்ளது.

இடம் : மறைமலைநகர்
தேதி : 11-02-2022

**எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெடுக்காக**
ஓ-ம்/-
அசோக்குமார் விஷ்வகர்மா
நிர்வாக இயக்குனர்
DIN : 05203223